


திருவாரூர் தொகுதிக்குட்பட்ட கொராடச்சேரி ஒன்றியம், பெருமாளகரம் ஊராட்சியில் புதிதாக கட்டப் பட்ட பொது வினியோக கட்டிடத்தினை மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகி கள் இருந்தனர்.

### தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில்

# திருப்பூர் மாவட்டத்தில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்!

## மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் அறிவிப்பு!

திருப்பூர், ஜன.6-

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் 2024-25 ஆம் ஆண்டிற்கு ஆன மாவட்ட நிலையில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கபடவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் அறிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்டம் வாரியாக கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 21.01.2025 ஆம் நாளன்றும், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 22.01.2025 ஆம் நாளன்றும் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கல்லூரிக் கூட்டரங்கில் காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளன. இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.



ஊத்தங்கரை, பர்கூர் சட்டமன்ற தொகுதிகளில் பல்வேறு திட்ட பணிகளை தொடங்கி வைத்தும் முடிக்கப்பட்ட பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில், ஒன்றிய செயலாளர் நரசிம்மன், குண.வசந்தரசு,எக்கூர் செல்வம், அறிஞர், ராஜேந்திரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் விஜயலட்சுமி பெருமாள், மாவட்ட கவுன்சிலர் சங்கர், ஆதி திராவிடர் நல குழு அமைப்பாளர் ஜீவானந்தம், மருத்துவர் அணி துணை தலைவர் தென்னரசு, துணை அமைப்பாளர்கள் சக்திவேல், பாலாஜி, ஊராட்சி மன்ற தலைவர் செல்வி கதிர்வேல், பெருமாள் உள்ளிட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருவெறும்பூர், ஜன. 6 -

திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தனது தொகுதிக்கு உட்பட்ட குண்டூர் ஊராட்சியில் உள்ள திருவளர்ச்சிபட்டி கிராமத்தில் புதிதாக கட்டி முடிக்கப் பட்ட அரசு துணை சுகாதார நிலையத்தை திறந்து வைத்ததுடன் சுகாதார நிலையத்திற்கு வந்திருந்த கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கியும், உணவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கினார்.

மேலும் இதனை அடுத்து குண்டூர் ஊராட்சி அய்யன் பத்தூர் கிராமத்தில் உள்ள நெசவாளர் காலனி பகுதியில் பல ஆண்டு காலமாக அப்பகுதி மக்கள் நடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். மேலும் இதனை அடுத்து அமைச்சரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்ததை எடுத்து 2 கிலோ மீட்டர் அளவிற்கு புதிய தார் சாலை அமைக்கும் பணி முடிவுற்று நேற்று முன்தினம் அதையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். மேலும் இதனை அடுத்து அப்பகுதி மக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார். மேலும் சூரியூர் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட அரசு துணை சுகாதார நிலையத்தையும் திறந்து வைத்ததுடன், சோழமாதேவி ஊராட்சியில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட சமுதாயகூடத்தையும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார், மேலும் இதே போல் நவல்பட்டு ஊராட்சி நவல்பட்டு புதுத்தெரு கிராமத்தில் பல ஆண்டுகளாக இருந்த உய்யகொண்டான் ஆற்றுப் பாலம் பழுதடைந்ததையடுத்து புதியதாக கட்டி முடிக்கப்பட்டபுது பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில்ஊராட்சிகள் திட்ட இயக்குனர் கங்காதரணி, திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், திருவெறும்பூர் ஒன்றிய குழு தலைவர் சத்யா கோவிந்தராஜ், ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி திருமுருகன், ஊராட்சி மன்ற தலைவர் சண்முகசுந்தரம், உட்பட அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுதும் உள்ள

# அரசு அலுவலகங்கள் - பொதுத்துறை நிறுவனங்கள் - பள்ளி - கல்லூரிகள் ஜன. 17 அன்று விடுமுறை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 6 -

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் 17.01.2025 அன்று விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வருமாறு:-

இவ்வாண்டு தமிழ்நாட்டில் 14.01.2025 செவ்வாய்கிழமை அன்று தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதாலும், 15.01.2025, 16.01.2025, 18.01.2025 மற்றும் 19.01.2025 ஆகியவை அரசு விடுமுறை நாட்கள் என்பதாலும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தங்களது சொந்த ஊருக்குச் சென்று பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடும் வகையில், அதற்கு இடைப்பட்ட நாளான 17.01.2025 (வெள்ளிக்கிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அறிவிக்குமாறு பலதரப்பிலிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன.

அக்கோரிக்கைகளை ஏற்று, முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தங்களது சொந்த ஊர் சென்று பொங்கல் பண்டிகையை கொண்டாடும் வகையில், 17.01.2025 (வெள்ளிக்கிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளித்தும், அவ்விடுமுறையை ஈடுசெய்யும் வகையில், 25.01.2025 (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவித்தும் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



எல்லோரும் நம்முடன் என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிடமாடல்நல்லாட்சியைஏற்று,கள்ளக்குறிச்சிதெற்குமாவட்டகழகசெயலாளரும்,ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் தொகுதி, பொறுப்பாளர் ச.அ.பெறுநர் கிள்ளி ஆகியோர் முன்னிலையில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் அசோக்குமார் மற்றும் ரங்கப்பனூர் ஊராட்சியை சேர்ந்த கழக நிர்வாகி முருகன் ஆகியோர்களின் ஏற்பாட்டில், மாற்றுக் கட்சியினர் சுமார் 50க்கும் மேற்பட்டோர் நமது தாய்க் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்தவர்களுக்கு கழக வேட்டி அணிவித்து புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து தெரிவித்து கழக பணி சிறப்பாக பணியாற்ற அன்புடன் வரவேற்றனர்.

### மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்,

# பெரம்பலூர் மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – தங்க.சித்தார்த்- ஏ.கே.அருண் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜன. 6 -

பெரம்பலூர் மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ்,

மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர்,

ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி,

மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ் , பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்துச்செல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வான் புகழ் வள்ளுவருக்கு சிலை அமைத்து 25 ஆண்டுகள் முடிவடைந்து, அதன் வெள்ளி விழாவை முன்னிட்டு, கடலுக்கு மேல் கண்ணாடி பாலம் அமைத்துத்தந்த,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும்,

பெரம்பலூரில் நடைபெற்ற திருச்சி மண்டல அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு மண்டல ஆய்வுக் கூட்டத்திற்கு கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ஆதிதிராவிடர் நலக்குழு அமைச்சர் ம.மதிவேந்தன் மற்றும் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தும்,

2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLC) நியமனம் செய்து மாவட்ட கழக அலுவலகத்தில் பட்டியல் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில், பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேலை,வேஷ்டி, லுங்கி, அரிசி,பாய் ஆகியவற்றை வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன் , மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் , சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோரிடம் வழங்கினார். இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி,மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன்,தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.இராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், நீ.ஜெகதீஷ்வரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்கள் வரகூர்.ராஜேந்திரன், தம்மை.தர்மராஜ், அசோக்குமார் மற்றும் வழக்கறிஞர் கண்ணன்,மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.

# திருப்பத்தூரில் இலவச பயிற்சி!

திருப்பத்தூர், ஜன. 5 -

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தனது சொந்த செலவில் சிறப்பான பயிற்றுனர்களை கொண்டு இந்த பயிற்சி வகுப்பு இலவசமாக நடத்தப்படுகின்றது. பயிற்சி வகுப்பு துவக்கவிழாவிற்கு திருப்பத்தூர் நகர செயலாளர் சு.ராசேந்திரன் தலைமை தாங்கினார்.

க.சையத்அலீம் வரவேற்பு வழங்கி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.ஏ.குணசேகரன், கே.முருகேசன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், சேர்மென்கள் சங்கீதாவெங்கடேஷ், விஜயா அருணாசலம், திருமதிதிருமுருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. தம்பையா
### சனவரி 6 (2023)



கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.

பகுதி பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்கு பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மாயவன்
### சனவரி 6 (1998)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கடலூர் மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**